### *Scholarships to Harijans and Backward Class students*

860 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன மாணவர்கள், பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் இவர்களின் ஸ்காலர்ஷிப் நிதிக்காக முறையே எவ்வளவு தொகை 1956–57, 1957–58 ஆண்டுகளில் மத்திய அரசாங்கம் கொடுத்தது ?

(ஆ) அப்படிக் கொடுக்கப்பட்டத் தொகை மாணவர் சதவிகித அடிப் படையிலா, அல்லது அவர்கள் வாங்கும் மார்க்கு சத விகித அடிப்படை யிலா ?

(இ) நம் மாகாண நிதியிலிருந்து கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப் ஏழை மாணவர்கள் என்ற அடிப்படையிலா அல்லது மார்க்கு அடிப் படையிலா ?

THE HON. SRI P. KAKKAN :

| | 1956–57. RS. | 1957–58. RS. |
|---|---|---|
| (*a*) (1) Eligible communities (excluding the amount granted by the Govermnet of India direct to the students). | 1,69,900 | 2,57,400 |
| (2) Backward Classes (excluding the amount granted by the Government of India direct to the students .. .. .. .. | 2,50,000 | 5,50,000 |

(*b*) The sanction of allotment to the State Government by the Government of India depends upon the schemes approved by them in the annual plan and the availability of funds.

(*c*) The award of scholarship by the Harijan Welfare Department is based on both merit and poverty of the students. The income limit for the grant of scholarships is fixed at Rs. 1,500 per annum for post-matric courses and Rs. 1,200 for students studying in the elementary and secondary schools.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் ஏழைகளுக்கு கொடுக் காமல் மார்க் அடிப்படையில் ஸ்காலர்ஷிப் கொடுக்கிற காரணத்தினால், ஏழைகளுக்கு படிக்க வசதி இல்லாத காரணத்தினால் அதிகப்படியான மார்க்குகள் வாங்க முடியாத ஒரு நிலை இருப்பது சர்க்காருக்குத் தெரி யுமா ? ஆகவே ஏழை என்கிற அடிப்படையில் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் சொன்ன பதிலில் கடைசி யாக சொன்னது, ஏழ்மைத்தனத்தையும், மெரிட்டையும் பார்த்துத்தான் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும் என்று.

### *Loans for Weavers' Societies*

* 860-A *Q.*—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நெசவாளர் சங்கங்களுக்கு நடைமுறைக் கடன்கள் (working capital loans) வழங்குவதற்காக 1957–58, 1958–59 ஆகிய வருஷங் களிலே ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எ வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix XI on page 599 infra.

4th November 1958]

**Sri P. G. MANICKAM** : மேற்கண்ட கடன்களாவது நெசவாளர்களுக்கு என்னென்ன காரியங்களுக்காக கொடுக்க திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri V. RAMAIAH** : தனிக் கேள்வி வேண்டும்.

**Mr. SPEAKER** : The hon. Leader of the Opposition has given notice of a private-notice question. He will kindly read the question.

* *Private Notice Q. No.* 3.—**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the Paramakudi Police headed by the Sub-Inspector raided the village Periyanagachi in Paramakudi taluk at 5 a.m. on 27th September 1958; and

(*b*) whether the headman and the talayari entered the houses in the village and caused damages to properties worth about Rs. 5,000?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) The Government have received information that, on the morning of the 26th September 1958, a Police party headed by the Sub-Inspector of Police, Paramakudi, searched the house of one Duraisinga Thevar of Perianagachi village with the object of arresting him in connexion with a criminal complaint that he caused hurt to the village talayari when the latter was attempting to distrain his property for defaulting in the repayment of a Government loan. The accused Duraisinga Thevar is reported to have absconded from the village since the commission of the offence.

(*b*) The Revenue Divisional Officer, Ramanathapuram, who conducted an enquiry into the matter on 30th September 1958, has reported that, the villagers whom he examined, did not make any mention of the looting of their properties by the village headman and the talayari. The Revenue Divisional Officer has also stated that he did not see any damaged vessels in any of the houses in the village. He has, therefore, come to the conclusion that these allegations are unfounded.

***Sri K. ANBAZHAGAN** : On a point of order, Sir. இன்று நடைபெற்ற கேள்வி விடை நேரத்தில் 854-வது கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததை ஒட்டி துணைக் கேள்வி கேட்ட போது, முதல் விடையானது கேள்வி கேட்டபோது தயாரிக்கப்பட்ட விடை என்றும் இப்பொழுதுள்ள நிலைமைக்கு அது பொருந்தினாலும் பொருந்தா விட்டாலும் அதைப்பற்றித் தெரிவிக்க இயலாது என்ற கருத்துபடக் கேள்வி கேட்டதற்குப் பதில் அளித்தார் அமைச்சர். பின்னர் அந்த நிலைமை மாறியிருக்குமானால் இன்றுள்ள நிலைமைக்குப் பொருந்த பதில் அளிக்க வேண்டுமா அல்லது அன்றிருந்த நிலைமைக்குப் பொருந்தியதனைப் பதிலாக அளிக்கலாமா என்பதைப்பற்றித் தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன். 10..10 a.m.

**Mr. SPEAKER** : என்னிடம் கொடுத்த பதிலை அவர்களிடத் தி சொல்கிறேன். அது சரியாக இல்லாவிட்டால் தனிக் கேள்வி போடலாம் அல்லது வேறு வழியிருக்கிறது.